


**07. 04. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டில் வரும் 23ஆம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்று நடைபெறும் வேட்பு மனு பரிசீலனையில் இதுவரை 234 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

98 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

2. தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலை நடத்த ஆயிரத்து 302 கோடி ரூபாய் தேர்தல் ஆணையத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

3. புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரம் இன்றுமாலை ஓய்வதால் இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் அரசியல் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

4. தேசத்தின் வலிமை மக்களின் அறிவுசார் திறனில் உள்ளதாக குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ஷ்ணன் கூறியுள்ளார்.

5. உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இனி விரிவான செய்திகள்

************

வேட்புமனு பரிசீலனை

தமிழகத்தில் வரும் 23-ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் இன்று பரிசீலிக்கப்படும் நிலையில் இதுவரை 234 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

98 நிராகரிக்கப்பட்டுள்ளன.

திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின்

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கேபழனிச்சாமி

திமுகவின் திரு.உதய நிதி ஸ்டாலின்

பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன்,

அக்கட்சியின் திருமதி வானதி ஸ்ரீனிவாசன்

டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன்,

பா.ம.க.வின் சௌமியா அன்புமணி

த.வெ.க தலைவர் திரு.விஜய்

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு.சீமான் உள்ளிட்டோரின் மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

உதகையில் பாஜக, காங்கிரஸ், நாம் தமிழர், த.வெ.க சுயேட்டைகள் என 7 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

மனுக்களை திரும்ப பெற நாளை மறுநாள் வரை கால அவகாசம் உள்ள நிலையில் அதனை தொடர்ந்து இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

************

அர்ச்சனா பட்நாயக்

தமிழ்நாட்டில் வரும் 13ஆம் தேதிக்குள் தேர்தல் பணிக்காக துணை ராணுவப்படையினர் வர இருப்பதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

சி.விஜில் செயலி மூலம் 2 ஆயிரத்து 600 புகார்கள் பெறப்பட்டு 2 ஆயிரத்து 364 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் ஐந்தாயிரத்து 938 வாக்குச்சாவடிகள் பதற்றம் மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தேர்தலை நடத்த ஆயிரத்து 302 கோடி ரூபாய் ஆணையத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

85 வயதிற்கு மேற்பட்ட இரண்டரை லட்சம் வாக்காளர்கள் தபால் வாக்கிற்காக பதிவு செய்துள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

************

பிரச்சாரம்

இதனிடையே அரசியல் கட்சி தலைவர்கள் தத்தம் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பிரதான வீதிகளில் மதிமுக வேட்பாளருக்கு ஆதரவாக வாக்குகளை திரட்டினார்.

மயிலாடுதுறை, பூம்புகார், நாகைப்பட்டினம், வேதாரண்யம், கீழ்வேளூரில் இன்று அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

பெரம்பலூர் அரியலூர் பகுதிகளில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தேர்தல் வாக்குறுதிகளை பட்டியலிட்டு பிரச்சாரம் மேற்கொண்டார்.

சேலம், கள்ளக்குறிச்சியில் இன்று அவர் வாக்குகளை சேகரிக்கிறார்.

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் திரு.சீமான் சென்னை மயிலாப்பூரில் இன்று வாக்குகளை திரட்டுகிறார்.

************

தேர்தல் விழிப்புணர்வு

இதனிடையே 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் நடவடிக்கைகள் அனைத்து மாவட்டங்களிலும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடலூர் முதுநகர் துறைமுகத்தில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு படகுபோட்டியை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் தொடங்கிவைத்ததாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

காஞ்சிபுரத்தில் தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் காய்கனிகள், மலர்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சியை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி சினேகா துவக்கிவைத்து பார்வையிட்டார்.

மதுரையில் "என் வாக்கு என் கடமை" என பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்ற மாரத்தான் போட்டியை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.பிரவீன் குமார் தொடங்கிவைத்ததோடு, வாக்களிப்பதன் அவசியம் குறித்த உறுதிமொழியையும் செய்துவைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

புதுச்சேரி, கேரளம் அஸ்ஸாம் தேர்தல்

இதனிடையே நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறும் புதுச்சேரி யூனியன் பிரதேசம், கேரளம், அசாம் மாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் இன்றுமாலையுடன் முடிவடைவதால் அரசியல் கட்சி தலைவர்கள் உச்சகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அரசியல் கட்சி தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதி கட்ட முயற்சியாக வீடு வீடாக சென்று வாக்குகளை திரட்டி வருகின்றனர்.

************

புதுச்சேரி தேர்தல் - மதுபானம்

இந்நிலையில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறுவதை ஒட்டி அதனை ஒட்டியுள்ள நாகை மாவட்ட, மதுபான கடைகள் இன்றுகாலை காலை தொடங்கி வரும் 9ஆம் தேதி நள்ளிரவு வரை மூடப்பட வேண்டும் என நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

************

குடியரசு துணை தலைவர்

தேசத்தின் வலிமை மக்களின் அறிவுசார் திறனில் உள்ளதாக குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ஷ்ணன் கூறியுள்ளார்.

புதுதில்லி இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைகழகத்தின் 39ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், தேசத்தின் திறன் சார் சுற்றுச்சூழலை வலுப்படுத்துவதல் இப்பல்கலைகழகம் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

தொழிற்கல்வி, சான்றிதழ் படிப்பு, திறன்பயிற்சிகளை பிராந்திய மையங்கள் மூலம் இப்பல்கலைகழகம் வழங்கி வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

இத்தகைய முயற்சிகள் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான முயற்சிகளை எடுத்து செல்ல வழிகோலும் என அவர்குறிப்பிட்டார்.

இப்பல்கலைகழகத்தில் 3 லட்சத்து 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளாக கூறிய அவர் இதில் 58 சதவிகிதம் பேர் மகளிர் என்றும், குறிப்பாக இவர்கள் ஊரகம் மற்றும் விளிம்பு நிலை பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் எடுத்துரைத்தார்.

இதன்மூலம் இப்பல்கலைகழகத்தின் சமூக பங்களிப்பு புலப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

உணவு பாதுகாப்பை உறுதி செய்து விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க மத்திய அரசு உயர் முன்னுரிமையுடன் செயல்படுவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் கூறியுள்ளார்

ஜெய்பூரில் வேளாண் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், விவசாய துறையை வலுப்படுத்த உறுதியான பல்முனை நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

விவசாயிகள் ஆளுமை பெற வேளாண்மை பரவலாக்கப்பட்டு தற்சார்பு அடைய வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய தொழில்நுட்பங்கள் அதி நவீன வேளாண் நடைமுறைகளை பின்பற்றி ஒருங்கிணைந்த பண்ணை நடவடிக்கைகள் தற்போதைய தேவை என்றும் அவர் எடுத்துரைத்தார்.

வேளாண் வளர்ச்சியுடன் சுற்றுச்சூழலை பாதுகாப்பது மிகவும் அவசியம் என்று குறிப்பிட்ட அவர் இயற்கை வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

************

நீரஜ் மிட்டல்

நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் உள்ள புலம் பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி ஒதுக்கீடான 5 கிலோ இலவச வர்த்தக சமையல் எரிவாயு சிலிண்டரை இரட்டிப்பாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச தலைமை செயலர்களுக்கு மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை செயலர் டாக்டர் நீரஜ் மிட்டல் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அந்தந்த மாநிலங்களில் உள்ள புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்க இந்த 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் எண்ணெய் நிறுவனங்களின் உதவியுடன் உணவு மற்றும் பொது விநியோக துறைகளில் கிடைக்க செய்ய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

************

உலக சுகாதார தினம்

உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுகாதாரத்திற்காக அனைவரும் அறிவியலோடு ஒருங்கிணைந்து நிற்போம் என்பதை கருப்பொருளாக கொண்டு இந்தாண்டு இத்தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில் மகிழ்ச்சியான ஆக்கப்பூர்வமான வளமான சமூகத்திற்கு நல் ஆரோக்கியமே அடித்தளம் என்று கூறியுள்ளார்.

நோய் வரும்முன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சமச்சீரான வாழ்க்கை முறையுடன் ஆரோக்கியமான சமூகத்தை கட்டமைக்க உறுதி ஏற்க அவர் அழைப்பு விடுத்தார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்தியில் வளமான பூமியை உருவாக்கும் பணியில் அயராது அளப்பரிய சேவை ஆற்றிவரும் பணியில் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அரசு உறுதிபூண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

************

ஜே.பி.நட்டா

மருத்துவ துறையை சேர்ந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்ட மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா மருத்துவ துறையின் அர்ப்பணிப்பால் நம் நாட்டின் சுகாதார கட்டமைப்பு வலுவாக உள்ளதாக குறிப்பிட்டார்.

நவீன அறிவியலையும் பழமையான பாரம்பரிய மருத்துவ முறையும் இணைந்த அணுகுமுறையால் நம் இல்லங்களில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் வாழ்க்கை முறை மேம்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

************

விபத்து

தூத்துக்குடி மாவட்டம் குறும்பூரில் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து ஒன்று மின் கம்பத்தில் மோதி இன்று விபத்துக்குள்ளானதில் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த 6 பேர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

************

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் குஹாட்டியில் இன்று இரவு ஏழரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் - மும்பை இண்டியன்ஸை எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது